Written by Administrator
Tuesday, 28 July 2009 08:48 - Last Updated Tuesday, 28 July 2009 09:16

தினமலர் 28.09.2009

மெரீனாவில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு ஆகஸ்ட் 15 முதல் தடை

சென்னை

மெரீனா கடற்கரையில் வரும் ஆகஸ்ட் 15ம் தேதி முதல் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிப்பதை அமல்படுத்த தடை பாதை வியாபாரிகளுடன் விழிப்பு ணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.

சென்னை நகரை அழகுபடுத்தும் நோக்கத்துடன் மாநகராட்சி மண்டல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் மெரீனா கடற்கரையில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்படும் என்று மேயர் மா.சுப்ரமணியன் அறிவித்தார்.

வரும் ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி முதல் மெரீனா கடற்கரையில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்க மாநகராட்சி இட்டமிட்டுள்ளது. அதை தடை முறைப்படுத்த பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தவது குறித்து, நேற்று மெரீனா கடற்கரை வியாபாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

மேயர் மா.சுப்ரமணியன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், மாநகராட்சி கமிஷனர் ராஜேந்திரன், எதிர்கட்சித் தலைவர் சைதை ரவி, பணிகள் நிலைக் குழுத் தலைவர் சுப்ரமணியம், கவுன்சிலர்கள் மற்றும் மெரீனா கடற்கரை வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மேயர் மா.சுப்ரமணியன் கூறியதாவது:

உலகில் எந்த நாட்டுக்கும் கொடுக்காத வகையில் சென்னைக்கு மெரீனா கடற்கரை அமைத்துள்ளது. அப்படிப்பட்ட மெரீனா கடற்கரை தற்போது சுற்றுச்சூழல் மாசு பாழடைந்து வருகிறது. இதற்கு, மணலில் பிளாஸ்டிக்குகள் தேங்கி இருப்பதே முக்கிய காரணம். ஆகவே, வரும் 15ம் தேதி முதல், மெரீனா கடற்கரையில் பிளாஸ்டிக் பொருட்களை விற்கவும், உபயோகப்படுத்தவும் தடை விதிக்கப்படுகிறது.

தற்போது, மெரீனா கடற்கரையில் பாலகர்கள் பிளாஸ்டிக் கவர்களை வீசி 'பேக்' செய்து விற்கப்படுகிறது. பாலகர்கள் வாங்கி சாப்பிடும் ஸ்பேர் பிளாஸ்டிக் கவர்களை மணலில் அப்படியே போட்டு விடுகின்றனர். அதனால், இனி வரக்கூடிய நாட்களில் பாலகர்கள் விற்க முடியாதபடி செய்ய வேண்டும்.

அதுபோல், தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் பாட்டில்களில் விற்கப்படும் தண்ணீர் தடை செய்யப்படும். அதை விற்பனை செய்யும் வியாபாரிகள் தவிர்க்க வேண்டும். போலியான தண்ணீர் பாக்கெட்டுகள் தயாரித்து, விற்ற 19 தீறுவனங்களை மாநகராட்சி கண்டறிந்து 'சீல்' வைத்துள்ளது.

தண்ணீர் பாட்டில்கள், பாக்கெட்டுகள் விற்பனை தடை செய்வதால், பொதுமக்களுக்கு பாதுகாப்பான தண்ணீர் வழங்க வசதியாக, மெரீனா கடற்கரையில் தண்ணீர் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பு மற்றும் குடிநீர் வாரியம் மூலம் நான்கு, ஐந்து இடங்களில் குடிநீர்க்கியக்கட்டட் நீர் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களால் பேப்பர் ஆப்பு ஏற்படுகிறது. நீர்வழிகளை தடுப்பதால் காய்கறிகள், மளிகைவிற்றால் பாதிப்பு அடைகிறது. அதோடு மனிதர்களுக்கு பல்வேறு வகை யில் உடல்நல பாதிப்பு ஏற்படுகிறது.

பற்றுறோரை ஏற்படுத்தும் பெண்களை மற்றும் வாரிக், தக்கவாடிக்கள் உருவாகிறது. சூழல் மண்டலத்தை கெடுக்கும் தத்தக ஆக்கரமிப் மற்றும் ஆண், பெண் இனப்பெருக்கத்தை தடுக்கும் எதிரியின் வாடி உருவாகிறது. ஆகவே, பிளாஸ்டிக் பொருட்கள் மாவ் எதிர்கால சந்ததியினர் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதால், பிளாஸ்டிக் தடை செய்யப்படுகிறது.

ஆகவே, வியாபாரிகள் கடைகளில் பிளாஸ்டிக் உபயோகப்படுத்தக் கூடாது, விற்கவும் கூடாது. அதோடு பிளாஸ்டிக் பொருட்களை கொண்டு வரும் பொதுமக்களை வியாபாரிகள் எச்சரிக்க வேண்டும். பாலகர்கள், குடிநீர் பாக்கெட்டுகள் மட்டுமல்லாது, பொதுவான வண்ணக்கலவும் மெரீனா கடற்கரையில் விற்கக் கூடாது. மீறி விற்பவர்கள் மீது மாநகராட்சி சார்பில் நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு மேயர் பேசினார்.